தமிழ்நாட்டை படுகுழியில் தள்ளிய

த.வெ.க. அரசுக்கு எதிராக தாம்பரத்தில் 5 ஆயிரம் மகளிர் கண்டன முழக்கம்!

மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சேலம் சுஜாதா கண்டன உரை!

காஞ்சிபுரம், நவ.2-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. தாம்பரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கண்டன உரை யாற்றினார்கள். 5 ஆயிரத் திற்கும் மேற்பட்ட மகளிர் அணி நிர்வாகிகள் அணி திரண்டு பங்கேற்று கண் டன முழக்கமிட்டனர்.

த.வெ.க. ஆட்சியில் விலைவாசி உயர்வு, போதைப்பொருள் விற் பனை, கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான வன் முறை, குழந்தைகள் கடத் தல் என பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண் டித்து, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில், நேற்று 31.10.26 காலை 10.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலை யில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காஞ்சிபு ரம் வடக்கு மாவட்ட மக ளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் தலை மையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ச.சசிகலா அனைவரையும் வரவேற்று பேசினார்.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தை முடித்து வைத்து கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா கண்டன உரை ஆற் றினார்.

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் கே.சி.சந்தியா, கலைவாணி, மீரா, வளர்மதி, விஜய லட் சுமி, பாண்டிச்செல்வி, மலர் விழி, சத்தியா, சரளா, தமிழ ரசி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் கல் யாணி ராமகிருஷ்ணன், நளினி, செண்பகவல்லி, சந் தியா செந்தில், விஜய லட் சுமி, சாந்தி, கலாவதி, தன லட்சுமி, வெற்றிசெல்வி, தாம்பரம் மாநகர மகளிர் அணி துணை அமைப்பா ளர்கள் ஆகியோர் முன்னி லையிலும் நடைபெற்றது.

மாவட்டக் கழகதுணைச் செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வர லட்சுமி மதுசூதனன், தாம் பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, செங்கல் பட்டு நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் கண்டன முழக் கங்களை எழுப்பினார்கள்.

முடிவில் தாம்பரம் மாந கர மகளிர் அணி அமைப்பா ளர் ரமணி ஆதிமூலம் நன்றி யுரை ஆற்றினார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகரச் செயலா ளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்ப ரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், வீ.தமிழ் மணி, எல்.இதயவர்மன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந. கோபால், ஏ.வந்தேமாதரம், பி.சந்தானம், ஜி.கே.ரவி, ஏ.மணி, நகரச் செயலாளர் கள் ஜெ.சண்முகம்,எம். கே.டி.கார்த்திக்,

பகுதி கழகச் செயலாளர் கள் டி.காமராஜ், எஸ்.இந்தி ரன், வே.கருணாநிதி, த. ஜெயக்குமார், இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ். பெர்னாட், பெருங்களத் தூர் சேகர், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், செம்பாக்கம் சுரேஷ், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் கோல்டு டி.பிரகாஷ் ஆகியோர் உட்பட 5,000-க்கும் மேற்பட்ட காஞ்சிபு ரம் வடக்கு மாவட்ட மக ளிர் அணியினர் கடும் வெய்யிலையும் பொருட்ப டுத்தாமல் அணி திரண்டு வந்து கலந்து கொண்டு கண் டன முழக்கங்களை எழுப் பினார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட் டத்தின் காரணமாக தாம்ப ரம் மாநகரமே ஸ்தம்பித் தது. தாம்பரம் சண்முகம் சாலை முழுவதும் மகளிர் அணியினர் திரண்டு வந்த தால் கூட்டம் பார்க்கக் கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தை இன்று ஸ்டிக்கர் ஒட்டி திறந்து வைக்கிறார் விஜய்!

தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்ட பேருந்து நிலையம்! மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. இனிப்பு வழங்கி கொண்டாடினர்!

புதுக்கோட்டை, நவ.2-

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைக்க முதலமைச்சர் புது கோட்டைக்கு வருகை தருகிறார். தி.மு.க. ஆட்சியில் ரூ.24 கோடி நிதி ஒதுக்கப் பட்டு கட்டி முடிக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் என்று கூறி பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டத்தில் தி.மு.க.வினர் ஈடுபட்டனர். திமுகவினரின் கொண்டாட் டத்தை தடுக்க புதிய பேருந்து நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் குவிக் கப்பட்ட தால் பரபரப்பு ஏற் பட்டது. புதுக்கோட்டை திமுக மாவட்ட அலுவலகத் தில் கொண்டாட்டத்திற்காக தி.மு.க.வினர் குவிந்த நிலை யில் அங்கேயும் 50-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக் கப்பட்டு திமுகவி னரை வெளியே விடாமல் தடுத்த தால் போலீசாரோடு வாக்கு வாதம் ஏற்பட்டது. காவல்து றையினர் இதுபோன்று செயல்பட்டால் முதலமைச்ச ருக்கு கருப்பு கோடி காட்டும் போராட்டம் நடத்தப்படும் என தி.மு.க.வினர் எச்சரிக்கை விடுத்தனர். தி.மு.க. அலுவல கம் முன்பு பட்டாசுகள் வெடித்து பொதுமக்களுக்கு லட்டு கொடுக்க திமுகவினர் முயன்ற போது லட்டு தட்டை போலீசார் பறிமுதல் செய்ததால் பரபரப்பு லட்டை பறிமுதல் செய்த போலீசாருக்கு தி.மு.க.வினர் எதிர்ப்பு தெரிவித்ததால் பறி முதல் செய்த லட்டு மீண்டும் திமுகவின ருக்கு வழங்கப் பட்டதால் பொதுமக்களுக்கு லட்டை வழங்கி முழக்கங்கள் எழுப்பி திமுகவினர் கொண் டாடினர்.

கடந்த திமுக ஆட்சியில் 24 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட புதுக்கோ ட்டை புதிய பேருந்து நிலை யத்தை திறந்து வைக்க நாளை தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் வருகை தர உள்ளார். இந்நிலையில் திமுக ஆட்சியில் தான் புதிய பேருந்து நிலையம் கட்டப் பட்டது, திமுக ஆட்சியில் செய்த திட்டங்களை தான் தொடங்கி வைக்க முதல மைச்சர் புதுக்கோட்டைக்கு வருகிறார் என்று தெரிவித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே செல்லபாண்டியன் திமுக எம் எல்ஏ டாக்டர் வை முத்து ராஜா, உள்ளிட்ட திமுகவினரோடு புதிதாக கட் டப்பட்ட புதிய பேருந்து நிலையம் முன்பு பட்டாசு கள் வெடித்து பொதுமக் ளுக்கு இனிப்புகள் கொடுத்து கொண்டாட்டத்தில் ஈடுப வருவதாக தகவல் வந்ததை தொடர்ந்து புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் புதுக்கோட்டை நகர துணை காவல் கண்கா ணிப்பாளர் பிருந்தா தலை மையில் குவிக்கப்பட்டனர்.

பின்னர் புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவல கத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ உள் ளிட்ட தி.மு.க.வினர் குவிந்த நிலையில் அங்கும் 50-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக் கப்பட்டு திமுகவினரை கட்சி அலுவலகத்தை விட்டு வெளியே வர முடியாத அள வுக்கு போலீசார் சூழ்ந்து நின் றதால் போலீசாருக்கும் தி. மு.க.வினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளர் செல்ல பாண்டியன் டி.எஸ்.பி. பிருந் தா விடம் இதுபோன்ற நட வடிக்கையில் காவல்துறையில் ஈடுபட்டால் தமிழ்நாடு முத லமைச்சர் புதுக்கோ ட் டைக்கு வரும்பொழுது கருப் புக்கொடி காட்டுவோம் என்று எச்சரித்ததை தொடர்ந்து போலீசார் கட்சி அலுவலகத்தை விட்டு கலைந்து ஓரமாகச் சென்ற னர்.

மேலும் புதுக்கோட்டை திமுக சட்டமன்ற உறுப்பி னர் முத்துராஜாவுக்கு இந்த விழா குறித்து முறைப்படி அழைப்பு விடுக்கவில்லை என்றும் திமுக ஆட்சியின் போது எதிர்க்கட்சியினருக் கும் அழைப்பு விடுக்க ப் பட்டு வந்த நிலையில் தனக்கு அழைப்பு முறையாக கொடுக் கவில்லை என்றும் திமுகவின் திட்ட ங்களை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்க புதுக்கோட்டைக்கு வருகிறார் திமுக ஆட்சி காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்கு தற்போதைய முதலமைச்சர் திறந்து வைக்க கூடிய அள வுக்கு திட்டங்கள் நிறை வேற்ற ப்பட்டது தி.மு.க.வின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டுவதை தமிழ்நாடு முதல மைச்சர் தவிர்த்து விட்டு புதுக்கோட்டைக்கு வரும் முதலமைச்சர் புதுக் கோட்டை மாவட்ட மக்கள் பயன்படும் வகையில் புதிய திட்டங்களை தர வேண்டும் என புதுக்கோட்டை எம். எல்.ஏ. முத்துராஜா கோரிக்கை விடுத்தார்.

வளசரவாக்கம் மண்டலத்தில்

ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள்!

மேயர் திருமதி ஆர்.பிரியா திறந்து வைத்தார்!

சென்னை,நவ.2-

மேயர் திருமதி ஆர். பிரியா, வளசரவாக்கம் மண் டலத்தில் மாநகராட்சி மூல தன நிதியின் கீழ் ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் அமைக் கப்பட்ட பூங்கா, நகர்ப்புற நல வாழ்வு மையம், வார்டு அலுவலகக் கட்டடம், நகர்ப் புற ஆரம்ப சுகாதார நிலை யத்தின் இரண்டாம் தளக் கட்டடம் உள்ளிட்டவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு நேற்று (01.11.2026) திறந்து வைத்தார்.


மேயர் அவர்கள், பெருந கர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு145க்குட்பட்ட நெற் குன்றம், மாதா கோவில் தெருவில் ரூபாய் 1.95 கோடி மதிப்பீட்டில் அமைக்கப் பட்ட பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். பின்னர், அப்பகுதியில் ரூபாய் 25 இலட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்ட நகர்ப் புற நலவாழ்வு மையம் கட்ட டத்தினைத் திறந்து வைத்தார்.

இப்பூங்காவில் திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடம், டென்னிஸ் கோர்ட், யோகா செய்யும் இடம், மினி அரங் கம் உள்ளிட்ட பல்வேறு வச திகளுடன் 3,821 சதுர மீட் டர் பரப்பளவில் ரூபாய் 1.95 கோடி மதிப்பீட்டில் அமைக் கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சக்தி நகர் பிரதான சாலையில் ரூபாய் 2.05 கோடி மதிப்பீட் டில் கட்டப்பட்ட 153ஆவது வார்டு அலுவலகக் கட்டடத் தினைத் திறந்து வைத்தார். இந்த வார்டு அலுவலகம் கட் டடமானது 422 சதுர மீட்டர் பரப்பளவில் பல்வேறு உட் கட்டமைப்பு வசதிகளுட ன் கட்டப்பட்டுள்ளது.

பின்னர், அப்பகுதியில் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட் டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் இரண்டாம் தளக் கட்டடத் தினைத் திறந்து வைத்தார். இந்த நகர்ப்புற ஆரம்ப சுகா தார மையத்தின் இரண்டாம் தளக் கட்டடமானது 158 சதுர மீட்டர் பரப்பளவில் மின் தூக்கி மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளு டன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் தெற்கு வட்டார துணை ஆணையா ளர் அஃதாப் ரசூல், மண்ட லக்குழுத் தலைவர் நொளம் பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் த.சத்திய நா தன், திருமதி சாந்தி இராம லிங்கம், ஏ.ஸ்டாலின், திரு மதி ச.பாரதி, மண்டல அலுவலர், செயற்பொறியா ளர் உள்ளிட்ட அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண் டனர்.



"மழைநீர்க் கால்வாய்களைத் தூர்வாரச் சொன்னால் வழக்கா?

மக்கள் நலனுக்காகக் குரல் கொடுப்பது குற்றமா?

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, நவ.2-

"அரசுக்கு எதிராகப் பேசி னாலே வழக்குப் பதிவு செய்து மிரட்டும் போக்கை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. வழக்குகள் எங் களை நோக்கி ஓரடி நகர்ந்து வந்தால், அவற்றை எதிர் கொண்டு நாங்கள் பத்தடி முன்னேறுவோம். வழக்குக ளாலும் விசாரணைகளா லும் திராவிட முன்னேற்றக் கழ கத்தை அச்சுறுத்த முடியாது" என்று சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாள ரும், மேனாள் அமைச்சரு மான பி.கே.சேகர்பாபு எம். எல்.ஏ. தெரிவித்தார்.

பருவமழை முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கண் டன ஆர்ப்பாட்டத்தில் பேசி யது தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில், B2 எஸ்பிளனேட் காவல் நிலை யத்தில் விசாரணைக்கு ஆஜ ரான பின்னர் செய்தியாளர்க ளிடம் அவர் கூறியதாவது:

வானிலை மற்றும் நீரியல் நிபுணர்கள் வடகிழக்குப் பரு வமழையின் தாக்கம் அதிக மாக இருக்கும் என்று எச்சரித் திருந்த நிலையிலும், தமிழக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ளவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்கெனவே இருந்த சுமார் 2,000 கிலோ மீட்டர் மழைநீர் வடிகால்க ளுடன் கூடுதலாக 1,200 கிலோமீட்டர் வடிகால்கள் அமைக்கப்பட்டன. மொத்த முள்ள சுமார் 3,200 கிலோ மீட்டர் மழைநீர் வடிகால்க ளையும் தூர்வார வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

மேலும், பருவமழை நிவா ரணப் பணிகளில் மக்கள் பிர திநிதிகளை முழுமையாக ஈடு படுத்த வேண்டும் என்றும், மாநகராட்சி மாமன்ற உறுப் பினர்களுக்கான மேம்பாட்டு நிதியை வழங்க வேண்டும் என்றும், சென்னை மாநகர மேயருக்குரிய அதிகாரங் களை முழுமையாக வழங்கு வதுடன், மாநகராட்சிக்குப் போதிய நிதி ஒதுக்க வேண் டும் என்றும் கோரிக்கை விடுத்தோம்.

தூங்கி வழியும் த.வெ.க. அரசு!

திராவிட மாடல் ஆட்சி யில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களும், அன் றைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்க ளும் மழை வருவதற்கு முன் பாகவே ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, மக களை நேரில் சந்தித்து, வெள் ளத் தடுப்பு மற்றும் நிவார ணப் பணிகளை முடுக்கிவிட்டனர்.

ஆனால் இன்றைய அரசு தூங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அரசைத் தட்டி எழுப் பும் நோக்கத்தில்தான் கடந்த அக்டோபர் 12ஆம் தேதி சென்னை மாவட்ட ஆட்சி யர் அலுவலகம் அருகிலும், சைதாப்பேட்டையிலும் கண் டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம்.



அந்த ஆர்ப்பாட்டத்தில் தெரிவித்த கருத்துகளுக்காக வழக்குப் பதிவு செய்யப் பட்டு, இன்று விசார ணைக்கு அழைக்கப்பட்டேன்.

விசாரணையின்போது 54 கேள்விகள் கேட்கப்பட்டன. அனைத்திற்கும் உரிய விளக் கங்களை அளித்திருக்கிறேன். மீண்டும் அழைத்தாலும் விசா ரணைக்கு ஆஜராகத் தயா ராக இருக்கி றேன்.

ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல!

"இம்மென்றால் சிறைவா சம்!

ஏனென்றால் வனவாசம்!"

என்ற பழமொழிக்கு இன் றைய அரசு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் பிரச்சினைகளு க் காகக் குரல் கொடுத்தாலே வழக்குப் பதிவு செய்வது ஜன நாயகத்திற்கு ஏற்றதல்ல.

இதுபோன்ற வழக்குகள், விசாரணைகள், அடக்குமு றைகள் மூலம் திராவிட முன் னேற்றக் கழகத்தைப் பணிய வைக்கலாம் என்று ஆட்சியாளர்கள் நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது.

எங்களை நோக்கி வழக்கு கள் ஓரடி நகர்ந்து வந்தால், நாங்கள் பத்தடி முன்னேறுவோம் என்பது தான் எங்களுடைய வரலாறு.

மக்கள் பணியை தொடருவோம்!

மக்களுக்காக எத்தனை துன்பங்கள் வந்தாலும், கழ கத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் எங்களுடைய மக்கள் பணி இன்னும் வேகமாகத் தொட ரும்.

ஒருபுறம் கழகத்தினர் மீது வழக்குகளைப் பதிவு செய் யும் அரசு, மறுபுறம் முதல மைச்சரை அடுத்தடுத்த தொகுதிகளுக்குச் சுற்றுப்பய ணம் மேற்கொள்ள வைக்கி றது.

ஐந்து நிமிடங்கள் பேசி னாலே அதிர்வலைகளை ஏற் படுத்துவோம் என்று கூறிய வர்கள், இரண்டு இடைத்தேர்தல்களிலும் வீதி வீதியாகச் சுற்றிவர வேண் டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

முருங்கைக்காய் பறிப்பது, மாட்டுவண்டி ஓட்டுவது, குழந்தைகளுக்கு முத்தம் கொடுப்பது, வேல் வாங்கு வது, சிலுவை வாங்குவது எனத் திரைப்படங்க ளில் நடிப்பதைப் போலப் பல் வேறு காட்சிகளை அரங்கேற் றினார்கள்.

ஆனால் மக்களின் தீர்ப்பு வேறு விதமாக அமைந்திருக் கிறது.

"தோல்வியிலும் எங்க ளுக்கு வெற்றி! வெற்றியிலும் அவர்களுக்குத் தோல்வி!" என்று எங்கள் கழகத் தலை வர் அவர்கள் கூறியதைப் போல, இன்றைய அரசியல் நிலவரமும் அதைத்தான் உணர்த்துகிறது.

அடித்த காற்றில் கோபுரத்திற்கு சென்றார்கள்!

ஆதவ் அர்ஜுனா போன் றவர்களின் விமர்சனங்கள் குறித்துக் கேட்கிறீர்கள்.

நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்க ளைப் போன்றவர்கள் அவர் கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்ட நெடிய அர சியல் வரலாற்றையும் பாரம் பரியத்தையும் அறியாதவர் கள்.

அடித்த காற்றில் கோபுரத் தின் உச்சிக்குச் சென்றவர்க ளைப் போல, திடீரென்று உயரத்திற்குச் சென்றவர்கள், ஒருநாள் கீழே இறங்கித்தான் ஆகவேண்டும்.

கழைக்கூத்தாடி கம்பியின் மேல் நின்று எத்தனை சாகசங் கள் செய்தாலும், மக்களைச் சந்திக்கத் தரைக்கு இறங்கித் தான் வரவேண்டும்.

அப்போது தான் மக்களின் உண்மையான கஷ்டங்களும் துயரங்களும் அவர்களுக்குப் புரியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் வழக்குகளுக்கு அஞ்சு கின்ற இயக்கமல்ல. மக்கள் நலனுக்காகப் போராடுகின்ற இயக்கம். ஆட்சியின் அவலங் களைத் தொடர்ந்து அம்பலப் படுத்துவோம். எத்தனை அடக்குமுறைகள் வந்தாலும் எங்களுடைய மக்கள் பணி ஓயாது!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. செய்தியாளர்களி டம் தெரிவித்தார்.

அதானே....

அதானே....
"முத்து
ராமலிங்கத் தேவர்"
என்கிறார்
அவர்...

"முத்து
ராமலிங்கம் மட்டுமே"
என்கிறார் இவர்

அதுசரி
முதல் அமைச்சருக்கும்
முதல் போட்ட
அமைச்சருக்கும்
குரூர
முட்டு மோதல்

குரு பூஜை
வாழ்த்திலுமா...

என்னநாஞ் சொல்றது





மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

தஞ்சை மாவட்டக் கழக முன்னாள் அவைத் தலைவர்

'மிசா' அப்துல்சமது மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை. நவ.2-

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன்னாள் கழக அவைத் தலைவர், பட்டுக்கோட்டை முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் ஹாஜா (எ) மிசா. அப்துல்சமது அவர் கள், (வயது 88) வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் நெருக்கடி நிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர். தற்போது வரை மிசா என்ற அடைமொழியோடு அழைப்படுபவர்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

தெற்கு மலையம்பாக்கம் கிளைக் கழகச் செயலாளர்

ப.பொன்னம்பலம் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!



காஞ்சிபுரம், நவ.2-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் - தெற்கு மலையம்பாக்கம் கிளைக் கழகச் செய லாளரும், மலையம் பாக்கம் ஊராட்சி துணைத் தலைவருமான ப.பொன்னம் பலம் அவர்கள் நேற்று (01.11.2026 - ஞாயிறு) மதி யம் 12.30 மணியளவில் இயற்கை எய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகி றோம்.

தகவல் அறிந்து கழ கத்தினர் ஏராளமா னோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ் சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (2.11.2026 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் அன்னா ரது இல்லத்திலிருந்து புறப் பட்டு தெற்கு மலையம்பாக் கம் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறு கின்றன.



மேயர் திருமதி ஆர். பிரியா, நேற்று (01.11.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு145க்குட்பட்ட நெற்குன்றம், மாதா கோவில் தெருவில் மாநகராட்சி மூலதன நிதியில் ரூபாய் 1.95 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் த.சத்தியநாதன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.